பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
13 09 2026 SUNDAY 12.40 PM
ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பேரிடர்கள், பெரும் தொற்று காலங்களில் உலகநாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு.நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.
- ஈரானுடன் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துவருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
- மானாவரி சாகுபடி எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று முடிவெடுத்து உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் அறிவித்துள்ளது.
- நேபாள பெருவெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 386 ஆக அதிகரித்துள்ளது.
- இந்தியா-ஆப்கானிஸ்தான் இடையேயான முதலாவது டுவென்டி டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

------------------

பேரிடர்கள், பெரும் தொற்று காலங்களில் உலகநாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு.நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் பாரத் மண்டபத்தில் நடைபெற்று வரும் பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் நிறைவு நாளான இன்று உரையாற்றிய அவர், உலகளாவிய சூழ்நிலையில் அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து பிரச்சனைகளை எதிர்க்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்.

உலகளாவிய சவால்களை கண்டறிந்து, அதற்கு உடனடியாக தீர்வுகாண வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்.

பரவி வரும் தொற்று நோய்கள் குறித்து தகவல்களை பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றும், அதனை எதிர்க்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

பிரிக்ஸ் நாடுகளின் சிறுநிறுவனங்களிடையே, தொழில்நுட்பம், நிதி, புதிய வர்த்தகம் உள்ளிட்டவை குறித்த தகவல்களை பரிமாற BRICS கூட்டமைப்பு இணையதளம் தொடங்கப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

புதுதில்லியில், நேற்று தொடங்கிய இந்த உச்சிமாநாட்டில், இந்தியா, ரஷ்யா, சீனா உள்ளிட்ட BRICS நாடுகளுடன் பெலாரஸ், கியூபா, வியட்நாம் உள்ளிட்ட 10 பங்கு நாடுகளும் கலந்துகொண்டுள்ளன.

நிலையாண்மை, புத்தாக்கம், ஒத்துழைப்பின் அடிப்படையில் உலகளாவிய ஒருங்கிணைந்த வளர்ச்சி என்ற தலைப்பில், இன்று ஆலோசனை நடைபெறுகிறது.

அதற்கு பின்னர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, *Kazakhstan* அதிபர் திரு. *Kassym, Philippines* அதிபர் திரு. *Ferdinand Marcos,* எகிப்து அதிபர் திரு. *Abdel Fattah,* தென்னாப்பிரிக்கா அதிபர் திரு. *Cyril Ramaphosa* உள்ளிட்டோருடன் தனித்தனியாக ஆலோசனை நடத்த உள்ளார்.

-----------------

ஈரானுடன் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துவருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஈரான் நிதியமைச்சர் திரு. *Seyed Ali Madanizadeh*-வுடன் ஆலோசனை நடத்திய அவர், பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் ஈரான் பங்கேற்றதற்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இருநாடுகளுக்கிடையேயான பொருளாதார ஒத்துழைப்பு குறித்து, பேசியதாக கூறியுள்ளது.

-----------------

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில், 18-வது பிரிக்ஸ் உச்சிமாநாடு சிறப்பாக நடைபெற்று வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர்.எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த உச்சிமாநாட்டில், ஆக்கப்பூர்வமான விவாதங்கள், பேச்சுவார்த்தைகள் மூலம் உலகளாவிய பிரச்சனைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பிரதமரின் தொலைநோக்கு பார்வை மூலம் பல்வேறு நாடுகளுடன் ஒத்துழைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதாக டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

-----------------

பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட புதுதில்லி பிரகடனத்திற்கு உலக சுகாதார அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் தலைமை இயக்குநர் *Tedros Adhanam* வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், அனைவருக்கும் மருத்துவ சிகிச்சை உறுதி செய்யப்படும் என்று அறிவித்ததை வரவேற்றார்.

காசநோயை ஒழிக்க பிரிக்ஸ் நாடுகள் ஒருங்கிணைந்து செயல்படும் என்று கூறியதை அவர் பாராட்டியுள்ளார்.

-----------------

சுதந்திர போராட்ட வீரர் *Jatindranath Das*-ன் நினைவுநாள் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, மத்திய உள்துறை அமைச்சர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக *Jatindranath Das* இளம் வயதிலேயே போராட்டத்தில் ஈடுபட்டதாக கூறியுள்ளார்.

சிறையில் அடைக்கப்பட்டப்போதிலும், அவர் தொடர்ந்து சுதந்திரத்திற்காக போராடியதாக தெரிவித்துள்ளார்.

சுதந்திரப் போராட்ட வீரர்களை சிறையில் மனிதநேயமற்ற முறையில் தண்டிக்கப்பட்டதற்கு எதிராக உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டதை நினைவு கூர்ந்தார்.

அவரது தியாகம் இப்போதும் ஊக்கம் அளிப்பதாக திரு. அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

-----------------

மேற்குவங்க மாநிலத்தின் *Medinipur* மாவட்டத்தில் *Junput* கடலோர கிராமத்தில், ஏவுகணை சோதனை மையம் அமைக்க அம்மாநில அரசு அனுமதி அளித்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு மையத்தின் பரிந்துரைக்கு அம்மாநில முதலமைச்சர் திரு. *Suvendu Adhikari* ஒப்புதல் அளித்துள்ளார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒடிசாவின் *Chandipur* ஏவுகனை சோதனை மையம், ஆந்திராவில் அமைக்கப்பட உள்ள சோதனை மையத்திற்கு பின்னர் மூன்றாவது மையம் மேற்குவங்கத்தில் அமைக்கப்போவதாக கூறியுள்ளார்.

இந்தத் திட்டம் மூலம், வேலைவாய்ப்புகள் அதிகரித்து, மேற்குவங்கத்தின் வளர்ச்சிக்கு உதவும் என்றும் திரு. *Suvendu Adhikari* குறிப்பிட்டார்.

------------------

மானாவரி சாகுபடி எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று முடிவெடுத்துள்ளாத மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற மானாவரி சாகுபடி மாநாட்டில் இது தொடர்பான தில்லி பிரகடனம் நிறைவேற்றப்பட்டதாக அமைச்சகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மானாவரி சாகுபடியை மாற்றி அமைக்க தகவல்கள் பரிமாறுவது, புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது, வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு இடையே ஒருங்கிணைந்து செயலப்படுவது உள்ளிட்டவை இந்த பிரகடனத்தில் உட்படுத்தப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் உரையாற்றிய இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் தலைமை இயக்குநர் திரு. *M. L. Jat* மானாவரி சாகுபடியின் மேம்பாட்டிற்காக அறிவியல் விஞ்ஞானத்தை பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சர்வதேச பயிர் ஆராய்ச்சி மையம் *ICRISAT* தலைமை இயக்குநர் *Himanshu Pathak* பேசுகையில் உணவு பாதுகாப்புக்கு மானாவரி சாகுபடியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

------------------

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இளம் தலைவர்களை உருவாக்கும் நோக்கில் மத்திய அரசு மைபாரத்தின் கீழ் இளைஞர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தருமபுரி மாவட்டத்தில் இப்போட்டிகளில் இளைஞர்கள் கலந்துகொள்ள வேணடும் என்று அம்மாவட்ட இளையோர் அலுவலர் திரு. சிவ சண்முகம் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

------------------

நேபாள பெருவெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து *386* ஆக அதிகரித்துள்ளது.

நேபாளத்தில் கடந்த மாதம் *26*-ம் தேதி ஏற்பட்ட பெருவெள்ளத்தால் காணாமல் போன் *5* ஆயிரத்து *130* பேரை தேடும் பணியில் அந்நாட்டு பாதுகாப்பு படையினரும், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன.

*104* பேரின் சடலங்கள் அடையாளம் கண்டறியப்பட்டு, அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

*இதுவரை, 13 ஆயிரத்து 700 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். காயமடைந்த 339 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.*

*Rasuwa Nuwakot, Dhading மாவட்டங்களில் 3 ஆயிரத்து 700-க்கும் மேற்பட்டோர் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.*

-----------------

*ஹோர்முஸ் நீரிணையில் கப்பல்கள் பாதுகாப்பாக செல்வது குறித்து ஈரானும், ஓமன் நாடும் ஒப்பந்தம் செய்ய முடிவெடுத்துள்ளன.*

*இது தொடர்பாக வளைகுடா நாடுகளில் மண்டல மாநாட்டில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்த ஒப்பந்தத்தின்படி, வளைகுடா பகுதிகளில் செல்வதற்கு ஈரான் கட்டுப்பாட்டில் உள்ள கடற்பகுதி வழியாக கப்பல்கள் செல்ல வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.*

*வளைகுடா கடற்பகுதியிலிருந்து கப்பல்கள், ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ள கடல்வழியாக வெளியில் செல்ல வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.*

*இருப்பினும் ஹோர்முஸ் நீரிணை அனைத்து கப்பல்களும் செல்வதற்கு திறக்கப்படவில்லை என்றும் ஈரான் அரசு தெரிவித்துள்ளது.*

*இதனிடையே, வளைகுடா பகுதியில் உள்ள நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் நாளை ஓமனில் ஆலோசனை மேற்கொள்ள உள்ளதாக ஈரான் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் Esmaeil Baghaei தெரிவித்துள்ளார்.*

-----------------

*தெற்கு குஜராத்தில் அடுத்த 24 மணி நேரத்திற்கு கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*Navsari, Valsad, Daman, Dadra, Nagar, Haveli பகுதிகளில் அதிகனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.*

*சூரத், பாவ்நகர் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் அதிகனமழையும், அகமதாபாத், வடோதரா, ராஜ்கோட் உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.*

-----------------

*இந்தியா-ஆப்கானிஸ்தான் இடையேயான முதலாவது டுவென்டி டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது. தில்லியில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.*

*Shreyas Iyer தலைமையிலான இந்திய அணியின் பும்ரா, திலக் வர்மா, சஞ்ஜூ சாம்சன் உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர்.*

-----------------

*ஆசியக் கோப்பை மகளிர் டுவென்டி டுவென்டி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது. துபாயில் இப்போட்டி இரவு 8 மணி தொடங்குகிறது.*

-----------------

*வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் இன்று இந்தியாவின் Isharani Baruah தாய்லாந்தின் Sarunrak-ஐ எதிர்க்கொள்கிறார்.*

*<<<<<<>>>>>>*